பல்வேறு துறைகளில் தொலைநோக்குப் பார்வையுடன், முத்தமிழறிஞர் கலைஞர் செயல்படுத்திய திட்டங்கள், உருவாக்கிய கட்டமைப்புகள் குறித்து இந்தப் பகுதியில் பார்த்து வருகிறோம். இந்த வாரம் **தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம்.**



# இடம் பொருள் கலைஞர் 26






# தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம்

## சமூக நீதி ஒளிரும் மருத்துவக் கல்வி

பள்ளி இறுதித் தேர்வு முடிந்து, பல வண்ணக் கனவுகளுடன் கல்லூரிகளை நோக்கிக் காலடி எடுத்து வைக்கத் தொடங்கிவிட்டார்கள் மாணவர்கள். இன்னும் சில நாட்களில் மருத்துவக் கல்விக்கான சேர்க்கையும் நடைபெற இருக்கின்றது. இந்த சமயத்தில், தமிழ்நாட்டில் மருத்துவப் பல்கலைக்கழகம் உருவான வரலாற்றை மாணவர்கள் தெரிந்துகொள்வது, மருத்துவக் கல்வியின் மாண்பை மட்டுமல்ல, அப்படி ஒரு பல்கலைக்கழகம் கொண்டு வந்த தலைவனின் தொலைநோக்குப் பார்வையையும் புரிந்து கொள்வது நல்லது.

**“முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்**
**தகநக நட்பது நட்பு”**

என்ற நட்பின் இலக்கணத்துடன் தொடங்கியது தான் தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். பல்கலைக்கழகம்.

1857-ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக்கழகம் தொடங்கப்பட்ட போது, அது அன்றைய ‘மெட்ராஸ் மாகாணம்’ என்று சொல்லப்பட்ட தமிழ்நாடு, கேரளம், கர்நாடகம், ஆந்திரம் மற்றும் ஒடிசா ஆகியவற்றுக்கு அது ஒரே ஒரு பல்கலைக்கழகமாக இருந்தது. பிறகு அண்ணாமலைப் பல்கலைக்கழகம் தோன்றியது.

சுதந்திரத்துக்குப் பிறகு, குறிப்பாக, தி.மு.கழகம் ஆட்சிக்கு வந்த பிறகு, மதுரை காமராசர், திருச்சி பாரதிதாசன், கோவை பாரதியார் பல்கலைக்கழகங்கள் தொடங்கப்பட்டன.



கலைப் பாடப் பிரிவுகள் தவிர, அறிவியல் துறையில் பாடங்களை வழங்க, கோவையில் தமிழ்நாடு விவசாயப் பல்கலைக்கழகம், சென்னையில் அண்ணா தொழில்நுட்பப் பல்கலைக்கழகம், கால்நடை விஞ்ஞானப் பல்கலைக்கழகம் ஆகியவற்றின் வரிசையில் உதயமானதுதான் தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம்.

### இந்தியாவின் பாஸ்டன் நகரம்

1989-ஆகஸ்ட் 31 ஆம் தேதி தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத்தின் தொடக்க விழா நடைபெற்றது.

அதில் உரையாற்றிய முத்தமிழறிஞர் கலைஞர், “அமெரிக்காவில் பாஸ்டன் நகரம் மருத்துவ வசதிகளுக்குப் பெயர் பெற்றது. அதே மாதிரியாக இன்று இந்தியாவில் சென்னை நகரமும் பெருமளவிற்குப் பெயர் பெற்றுள்ளது என்றால் மிகையாகாது.

பல ஆண்டுகளாகவே சென்னையில் பல்வேறு மருத்துவத் துறைகளில் தலைசிறந்த வல்லுநர்கள் இருந்திருக்கிறார்கள். கடந்த சில ஆண்டுகளில் பரிசோதனைக்கும் மருத்துவத்திற்கும் பலவித நவீன வசதிகளும் பெருகியுள்ளன. இதன் காரணமாக, தமிழ்நாட்டிலிருந்து மட்டுமின்றி, இந்தியாவின் மற்ற மாநிலங்களில் இருந்தும், பிற நாடுகளில் இருந்தும்கூட சென்னைக்கு நோயாளிகள் மருத்துவத்திற்கு வருகின்றார்கள்.

இவ்வாறு தனியார் துறைகளில் இருக்கும் வல்லுநர்களிடமும் டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம் தொடர்புகொண்டு அவர்களின் அறிவையும், ஆற்றலையும் பயன்படுத்திக் கொண்டு மருத்துவக் கல்வியை வளர்த்திட தமிழ்நாட்டில் நல்ல வாய்ப்புள்ளது” என்றார்.

### இந்தியாவில் இரண்டாவது பல்கலைக்கழகம்

இந்தப் பல்கலைக்கழகத் தொடக்க விழாவின்போது, மேனாள் மேதகு குடியரசுத் தலைவர் ஆர்.வெங்கட்ராமன் கலந்து கொண்டார்.

அப்போது பேசிய அவர், “இந்தியாவிலேயே இரண்டாவது மருத்துவப் பல்கலைக்கழகமாக டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம் அமைகிறது. மருத்துவப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி களுக்கு இது பெரிதும் பயன்படப் போகிறது.

தமிழ்நாடு, மருத்துவத் துறையில் நீண்ட பாரம்பரியத்தைக் கொண்டது. 1835-ஆம் ஆண்டிலேயே சென்னை மருத்துவக் கல்லூரி தொடங்கப்பட்டது. ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி பெறக்கூடிய 8 மருத்துவக் கல்லூரிகள் இந்த எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டு இருப்பதாக நான் அறிகிறேன்.

மருத்துவப் பல்கலைக்கழகங்கள் மருத்துவப் பட்டதாரிகளையும் வல்லுநர்களையும் உருவாக்கக்கூடியவை மட்டுமல்ல, மக்களுக்குச் சேவை செய்யும் மனப்பான்மை கொண்டவர்களையும் உருவாக்குபவை.

ஒவ்வொரு ஆண்டும் 13,000 மருத்துவப் பட்டதாரிகள் உருவாக்கப்படுகின்றனர். அதே சமயத்தில் தேவைக்குக் குறைவாக 8,000 செவிலியர்களைத்தான் நம்மால் உருவாக்க முடிகிறது என்பது வருந்தத்தக்கது. இந்த மருத்துவப் பல்கலைக்கழகம் கிராமப்புற மக்களுக்குச் செலவற்ற மருத்துவ வசதி அளிப்பதில் மிகுந்த கவனம் எடுத்துக் கொள்ள வேண்டும்" என்று சொல்லி, செவிலியர்களின் தேவை குறித்து முக்கியமான விஷயத்தைக் கவனப்படுத்தினார்.

### மருத்துவத் துறை மகுடம்!

குடியரசுத் தலைவர் சொன்னதை இந்தப் பல்கலைக்கழகம் கவனத்தில் எடுத்துக்கொண்டதன் பிரதிபலிப்புதான், இன்று இந்தப் பல்கலைக்கழகத்தின் கீழ் இளநிலை மருத்துவப் படிப்பை (எம்.பி.பி. எஸ்) வழங்கும் அரசு மற்றும் தனியார் மருத்துவக் கல்லூரிகளின் எண்ணிக்கை 57 ஆக இருக்க, இளநிலை நர்சிங் படிப்பை வழங்கும் கல்லூரிகளின் எண்ணிக்கையோ 227 ஆக உள்ளன.

தற்சமயம், இப்பல்கலைக்கழகத்தின் இணைப்பு பெற்ற கல்வி நிறுவனங்களில், சுமார் 2 லட்சம் மாணவர்கள் பயின்று வருகின்றனர்.

மருத்துவக் கல்விக்கான நுழைவுத் தேர்வு முறை ரத்து, தாழ்த்தப்பட்ட மற்றும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு இடஒதுக்கீடு, அரசுப் பள்ளி மாணவர்களுக்கு முன்னுரிமை மற்றும் இடஒதுக்கீடு, ‘நீட்’ தேர்வுக்கு எதிரான போராட்டம் என அத்தனைக்கும் விதை போட்டவர் முத்தமிழறிஞர் கலைஞர். அவற்றுக்கெல்லாம் மகுடம் வைத்தது போல் அமைந்ததுதான் இந்தப் பல்கலைக்கழகம். அதன் பலன்தான் இன்று **‘இந்தியாவின் ஆயுள் ரேகை’**யாக தமிழ்நாடு மாறி வருகிறது.


...வலம் வருவோம்

இந்தப் பல்கலைக்கழகம் தொடங்கப்பட்ட போது, அதன் கீழ் வெறும் 8 கல்லூரிகள் மட்டுமே இணைப்புக் கல்லூரிகளாக இருந்தன. இன்று 726 கல்லூரிகள் உள்ளன. அவற்றின் விவரம்:

❖ மருத்துவம் - **57**, ❖ பல் மருத்துவம் - **22**, ❖ இந்திய மருத்துவம் - **54**, ❖ மருந்தியல் - **84**, ❖ செவிலியர் - **227**, ❖ இயன்முறை சிகிச்சை - **53**, ❖ தொழில்வழி சிகிச்சை - **12**, ❖ பிந்தைய முனைவர் பட்டயப் படிப்பு - **43**, ❖ மருத்துவம் சார்ந்த துணை மருத்துவக் கல்வி - **174**.

ஆதாரம் : மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை கொள்கை விளக்கக் குறிப்பு.

## கொள்கைப் பாய்ச்சல்!




சமூக நீதிப் போராட்டங்கள் பெற்றுத் தந்த உரிமைகள், நமது தமிழ்நாட்டை முன்னேறிய மாநிலமாக மாற்றியுள்ளது. திராவிடக் கொள்கைகளே நமது மாற்றங்கள், கட்டமைப்புகள் அனைத்துக்கும் காரணமாக உள்ளன. இந்த நிலையில்தான் வல்லூறுகள்போல நம்மைச் சூழ்ந்து கொள்ளத் துடிக்கின்றன வகுப்புவாத அரசியல் சக்திகள்.

சனாதனத்தை விரட்டி சமூக நீதி காத்த திராவிட நிலத்தில் மீண்டும் சனாதனத்தை நிறுவ விரும்புகின்றனர். முயற்சி செய்கின்றனர். அதற்காகப் பல மட்டங்களில் அரசியல் செய்து வருகின்றனர். கிடைக்கும் மேடைகளில் சனாதன கருத்துக்கு ஆதரவாகப் பேசி, மக்களைத் திசை திருப்புகின்றனர். இந்த வேளையில், திராவிடர் விடுதலைக் கழகம் **‘எது திராவிடம்? எது சனாதனம்?’** என விளக்கும் தெருமுனைக் கூட்டங்களை நடத்தி வருகிறது. சென்னையில், 200 இடங்களில் நடத்தத் திட்டமிட்டு, அதற்கென பிரச்சார வாகனத்தையும் வடிவமைத்துள்ளனர். தமிழ்நாடு முழுவதும் 1,000 இடங்களில் இந்தக் கூட்டங்கள் நடைபெற உள்ளன.

தேர்தல் காலம் நெருங்கி வருவதால், முன் எப்போதையும் விடவும் வகுப்புவாத சக்திகளும், சாதிய சக்திகளும் தமிழ்நாட்டைச் சூழ்ந்து, நாளொருவண்ணம் குழப்பங்களை உருவாக்கி வருகின்றன. இந்த நிலையில், திராவிடர் விடுதலைக் கழகத்தின் இந்த முயற்சி மக்கள் மனதில் கொள்கையைப் பாய்ச்சும், சிறந்த பாய்ச்சல்!

## :ப்ளாஷ்பேக்



## வழிகாட்டித் தொண்டர்!


முத்துராமலிங்கம்

1995-ஆம் ஆண்டு, ஒன்றுபட்ட மதுரை மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளராகவும் தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் நான் இருந்தேன். அப்போது நாங்கள் விடுத்த அழைப்பின் பெயரில், புதிதாகக் கட்டிய வீட்டினை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் திறந்து வைத்து, வாழ்த்துரை வழங்கினார்கள். அவர் ஆற்றிய உரையில் “என்னை எல்லோரும், ‘கழகத்தின் வழிகாட்டி’ என்று சொல்வார்கள். ஆனால், மதுரை மாவட்டத்தில் நான் கழக நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளப் போகும்போதெல்லாம், எனது காருக்கு முன்னே தம்பி முத்துராமலிங்கம் தன்னுடைய மோட்டார் பைக்கில் வழி காட்டிச் செல்வார்” என்று சொன்னது இன்றைக்கும் மகிழ்வூட்டுகிறது. என் குழந்தைகளுக்கு மு.கருணாநிதி, மு.செந்தமிழ், மு.மணிமேகலை என்று பெயர் வைத்திருந்ததைக் கேட்டு, அவர் உதிர்த்த அந்தப் புன்னகைக்கு ஈடில்லை.

**-எம்.முத்துராமலிங்கம், மாநில இணைச் செயலாளர், கழக விவசாய அணி, மதுரை.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை- 600 018. வாட்ஸ்அப் எண்: 90033-24473, மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### மக்களுக்குத் தெரியும்!

**1972-ஆம் ஆண்டில் நடைபெற வேண்டிய பொதுத்தேர்தல், ஓர் ஆண்டுக்கு முன்னதாகவே வந்துவிட்டது. இது குறித்து கலைஞர் கருத்து கூறுகையில், ‘‘தங்களுடையதும், தங்களின் வருங்கால சந்ததியருடையதுமான வருங் காலத்தை மக்கள் தீர்மானிக்க வேண்டியவர்களாக இருக்கின்றனர். எந்தத் தலைவர்கள் மக்களை எங்கே அழைத்துச் செல்வார்கள் என்பதை, மக்கள் உணர்ந்திருப்பார்கள். எனவே, வறுமையை ஒழிக்கவும் போராடவும், சமுதாயத்தின் அடித்தளத்தில் கிடக்கிற உழைக்கும் பாட்டாளி மக்களுக்கு இது நல்ல வாய்ப்பு. நான் மக்கள் மீதும், ஜனநாயகத்தின் மீதும் மகத்தான நம்பிக்கை வைத்திருப்பவன்’’ என விளக்கினார். 50 ஆண்டுகளைக் கடந்தும் அந்தச் சொற்கள் உயிர்ப்புடன் இருக்கின்றன.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 177




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131